## தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை - 2019

--------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 24(அ) ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் பாதீடு செய்யப்பட்ட தொகை மற்றும் உள்படியான தொகைகள் தனியாக வெளிப்படுத்தக் கூடிய வகையில் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய | நியம இலக்கம் 01 இன் 24(அ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட தொகை மற்றும் உள்ளபடியான தொகைகள் தனித்தனியாக வெளிப்படுத்தக் கூடிய வகையில் 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை | நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் பாதீடு செய்யப்பட்ட தொகை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், மீளாய்வாண்டிற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் அவ்வாறு பாதீடு செய்யப்பட்ட தொகை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 2 இற்கு முரணாக தொழிற்படு மூலதன விடயமொன்றை சீராக்குவதற்குமுன் செயற்பாட்டு இலாபம் ரூபா 44,580,305 தொகை குறைவாகவும், முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 51,508,806 தொகை அதிகரித்தும் நிதிச் செயற்பாடுகளில் இருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 873,493 தொகை அதிகரித்தும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டதன் படி 2019 ஆம் ஆண்டிற்குரிய காசுப்பாய்ச்சல் கூற்றை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் சரியாக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய ஊழியர் ஊழியர் மருத்துவ காப்புறுதி செலவினம் ரூபா 6,424,960 ஆக இருந்த போதிலும், அது நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 5,268,328 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 1,156,632 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு அந்த ஊழியர் மருத்துவ காப்புறுதி செலவினம் ஊழியர் ஊதிய செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், போக்குவரத்து தொலைத்தொடர்பு மற்றும் ஏனைய சேவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018/2019 ஆண்டிற்குரிய உள்ளீட்டு வரி (Input Tex) சீராக்கல் மேற்கொள்ளப்படாமையின் அடிப்படையில் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது இந்த பெறுமதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய செலவினங்களை சரியாக இனங்காண வேண்டியதுடன், சரியாக செலவினங்கள் வகைப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 88,766,649 தொகையான திறைசேரி உண்டியல்களுக்கு உரிய ரூபா 2,753,249 தொகையான பெறவேண்டிய வட்டி வருமானம் கணக்குகளில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், | ரூபா 88,766,649 தொகையான திறைசேரி உண்டியல்களுக்குரிய வட்டி, கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட திகதி வரையில் கிடைக்கப் | பெறவேண்டிய வட்டி வருமானம் சரியாக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | |
|---|---|
| மீளாய்வாண்டில் ஏனைய திறைசேரி உண்டியல்களுக்காக கிடைக்கவேண்டிய வட்டி வருமானத்தை கணிப்பீடு செய்யும் போது ரூபா 100,868 குறைவாக கணிப்பிடப்பட்டிருந்தது, இதனால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 2,854,116 குறைவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பெறாதிருந்தமையால் கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்தது. அந்த பணம் மற்றும் வட்டி கணிப்பிடும் போது குறைவாக கணிப்பிடப்பட்ட ரூபா 100,868 தொகை 2020 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது முன்னைய ஆண்டின் சீராக்கம் (Prior adjustment) இன் கீழ் சீராக்கப்பட்டுள்ளது. |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தனியார் நிறுவனங்களில் இருந்து அதிகாரசபைக்கு கிடைக்கவேண்டிய ரூபா 40,456,462 தொகையான கடன் மீதியை உறுதிப்படுத்தும் கடிதம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இந்த கடன் மீதியை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | மீதி உறுதிப்படுத்தப்படாத கடன் மீதிகளின் பௌதீக ரீதியான இருப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து 14 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அதிகாரசபைக்கு அறவிடவேண்டியிருந்த ரூபா 31,550,000 தொகையான கடன் மீதிக்காக கடன் உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 4,011,609 வட்டி வருமானம் ஒன்று கணிப்பிடப்பட்டு அது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் 33 ஆம் பந்திக்கு முரணாக ஆண்டின் வருமானம் ஒன்றாக இனங்காணப்பட்டு அது வட்டி வருமானத்திற்கு சமமான மீதியொன்று அறவிட முடியா கடனாக ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் | செயற்பாட்டு நடவடிக்கைகளின் இலாபத்தை கணிப்பிடும் போது வட்டி வருமானமாக ரூபா 4,011,609 தொகை வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு சமமான தொகையொன்று அறவிட முடியாக் கடன் குறை ஒதுக்கீடாக குறைக்கப்பட்டிருந்தது. அதனால் அதன் தாக்கம் பூச்சியமாக இருந்தது. கணக்காய்வு ஐயவினாவில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் | உரிய நியமத்தின் பிரகாரம் வருமானங்களை இனங்கண்டு அது தொடர்பாக வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், இழப்பீட்டு பெறுமதிக்காக தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன், மேற்கூறப்பட்ட கடன் மீதிக்காக ஏற்பட்ட இழப்பீட்டு பெறுமதிக்காக தேவையான சீராக்கங்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 4,011,609 தொகை குறைத்து காண்பிக்கப்படவில்லை. எவ்வாறாயினும் கணக்காய்வு ஐயவினால் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் இந்த பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதியல்லாத வேறுபாடுகளின் கீழ் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மிகையில் சேர்க்கப்பட்டு அப்பெறுமதி மீண்டும் குறைக்கப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 63,223,492 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 74,288,048 ஆகும். அதன் பிராகரம் நிதி விளைவுகளில் ரூபா 11,064,556 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு விளைவுகளின் வீழ்ச்சிற்கு பிரதானமாக அரசாங்கத்தின் மூலதன நிதி உதவி குறைவடைந்தமை, மூலதன மானியங்களுக்கு எதிராக பெறுமானத் தேய்வை பதிவழித்தல் குறைவடைந்தமை மற்றும் பணிக்கொடை ஒதுக்கீடுகள் அதிகரித்தமை என்பன காரணங்களாக இருந்தன.

### 2.2 விகிதாசார பகுப்பாய்வு

நடைமுறை விகிதம் முன்னைய ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 1:9.73 முதல் 1:5.87 வரையும், விரைவு விகிதம் 1:9.40 முதல் 1:5.73 வரையும் குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டில் 18.54 சதவீதமான இலாப விகிதம் மீளாய்வாண்டில் 14.49 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையில் பதிவு செய்துள்ள ஆலை உரிமையாளர்களின் உற்பத்திகளை சந்தைக்கு சமர்ப்பிக்கும் போது அவற்றை இடுவதற்காக 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை தொடர் | 2017 ஆம் ஆண்டில் காணப்பட்ட அதிக வரட்சியின் காரணமாக தேங்காய் விளைச்சல் கவனத்திற்குரிய அளவில் குறைவடைந்ததுடன், புதிய உற்பத்தியாளர்கள் உற்பத்தி நடவடிக்கைகளில் இருந்து விலகியிருந்தனர். | காணப்படுகின்ற ஸ்டிகர் இருப்பை முறையான பிரகாரம் களஞ்சியப்படுத்தி உற்பத்தியாளர்களுக்கு விநியோகிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| இலக்கத்துடன் ஸ்டிகர் முறை லேபல் அச்சிடும் போது பதிவுசெய்த ஆலை உரிமையாளர்களின் உற்பத்தி இயலளவு மற்றும் எதிர்கால தேவைகளை கவனத்தில் கொள்ளாமல் ஸ்டிகர் அச்சிடப்பட்டமையினால் ரூபா 9,262,700 பெறுமதியான 5,017,133 ஸ்டிகர் அளவொன்று பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பிரதான களஞ்சியத்திலும் தயாரிப்பு பிரிவிலும் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வரலாற்று ரீதியில் ஆகக் குறைந்த தேங்காய் விளைச்சல் அறிக்கையிடப்பட்ட வருடமாக 2018 ஆம் ஆண்டு உட்பட்டிருந்தமையுடன் தெங்கு சார்ந்த கைத்தொழில்களில் பாரியளவான வீழ்ச்சியும் ஏற்பட்டிருந்தது. இதனால் நாங்கள் எதிர்பார்த்த பிரகாரம் உற்பத்தியாளர்களை பதிவு செய்தலோ அல்லது லேபல்களை கொள்வனவு செய்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>தற்போது களஞ்சியத்தில் எஞ்சியுள்ள லேபல் 2020 ஆம் ஆண்டு கைத்தொழில்களை பதிவுசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது உரிய கைத்தொழில் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக மீண்டும் அச்சிடல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது உரிய நிறுவனங்களின் உற்பத்தி இயலளவு மற்றும் அவர்களின் எதிர்கால தேவைகளையும் கவனத்தில் கொண்டு அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டியதுடன், அந்த ஸ்டிகர் பயன்படுத்தாமையை தவிர்ப்பதற்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டு ரீதியில் உற்பத்தி செய்யப்படுகின்ற தேங்காய் எண்ணெயின் தரத்தை அதிகரித்து தரமான தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்து பொதியிட்டு சந்தைக்கு சமர்ப்பிப்பதற்காக உள்நாட்டு தேங்காய் எண்ணெய் உற்பத்தி கைத்தொழிலாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் தயாரிப்பு பிரிவினால் | இந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 3,000,000 தொகை கொள்கலன்களை பெற்றுக் கொள்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு கைத்தொழிலாளருக்கு 30 லீற்றர் கொள்கலனுக்காக ரூபா 120,000 அதிகரித்த தொகையொன்று அதிகார சபைக்கு செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தமை 2020.01.14 | உள்நாட்டு ரீதியில் உற்பத்தி செய்யப்படுகின்ற தேங்காய் எண்ணெயின் தரத்தை அதிகரிப்பதற்கான திட்டங்கள் சரியாக தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டு வருடாந்த பாதீட்டில் ரூபா 9,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், திட்டமிடப்பட்ட பணிகள் அந்த முறையில் மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்திற்கு முடியாமையின் அடிப்படையில் வருடாந்தம் ஒதுக்கப்பட்ட தொகையில் 57 சதவீதம் அதாவது ரூபா 5,101,307 தொகை சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. | ஆம் திகதி நடைபெற்ற தரமான தேங்காய் எண்ணெய்க்கான குறியீடுகளை விநியோகிக்கும் கூட்டத்தின் போது முகாமைத்துவம் குறிப்பிட்டிருந்தது. அதனால் இந்த கொள்கலன்களை உற்பத்தி செய்து பகிர்ந்தளிக்கும் செயற்பாடுகளை நிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.<br><br>2020 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் வரையிலும் தரமான தேங்காய் எண்ணெய்க்காக விநியோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட குறியீடு இலங்கை புலமைச்சொத்துக்கள் பணியகத்தினால் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படாதிருந்தமையை குறிப்பிடுகின்றோம். | முன்தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் தேவையான நிதி ஏற்பாடுகளை ஒதுக்குதல் வேண்டும். |
| (ஆ) | தேங்காய்களை பயன்படுத்துவதற்கு பதிலாக பெறுமதி சேர்க்கப்பட்ட தேங்காய் உள்ளீடுகள் சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக ஊடகங்களை ஈடுபடுத்தும் மூன்று நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும், 2019 ஆம் ஆண்டில் எந்தவொரு நிகழ்ச்சித் திட்டமும் நடத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், இது தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டின் போது இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 9,344,832 தொகையில் ரூபா 7,060,032 தொகைக்காக வானொலி காலமொன்றை வழங்குவதற்கு ரூபவாஹினி கூட்டுத்தாபனம் இணங்கியிருந்த போதிலும், சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் காணப்பட்ட விசாரணையின் காரணமாக அந்த உரித்தை பயன்படுத்த முடியாதிருந்த போதும், அந்த உரித்து நிதிக்கூற்றுக்களில் | மூன்று வியாபார அறிவித்தலை விளம்பரப்படுத்துவதற்கான வானொலி காலத்திற்காக அதிக கிரயமொன்று ஏற்படுகின்றமை கலந்துரையாடப்பட்டிருந்தமையால் ஒரு வியாபார அறிவித்தல் வகையொன்றை மாத்திரம் (30 வினாடிகள் வீதம் 02 தொலைக்காட்சி வியாபார அறிவித்தல்) உற்பத்தி செய்வதற்காக பெறுகைக் குழு தீர்மானித்த போதிலும் முன்னாள் தலைவரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ள முடியாதமையின் அடிப்படையில் அந்த நடவடிக்கைகளை எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. மேலும் தற்போது இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான மிகுதியாக காணப்படுகின்ற தெங்கு அபிவிருத்தி அதிகார சபைக்குரிய ரூபா 7,060,032 தொகையை பயன்படுத்தும் இயலுமை தொடர்பாக அந்த | செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தும் இயலுமை தொடர்பாக முன் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் இணங்கியிருந்த வானொலி காலத்தை பெற்றுக் கொள்வதை விரைவுபடுத்துதல் மற்றும் அந்த உரித்து தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை . | நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய (2014) விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்கின்ற இலஞ்சம் அல்லது ஊழல் ஆணைக்குழுவில் 03 சந்தர்ப்பங்களின் போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அதற்கு சரியான பதில் இது வரை வழங்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டின் இறுதி 06 மாதங்களில் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான அலுவலகத்தில் ஆய்வுகூடத்திற்கு தெங்கு சார்ந்த உற்பத்திகள் தொடர்பான சேகரிக்கப்பட்ட மற்றும் வெளித்தரப்பினர்களிடம் இருந்து பரிசோதனைக்காக 384 மாதிரிகள் பெறப்பட்டிருந்த போதிலும், போதியளவான பிரகாரம் ஆய்வுகூட பதவியணியினரை பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் நியதிகளின் பிரகாரம் அதிகார சபையினால் தீர்மானிக்கப்பட்ட அறிக்கை விநியோகிக்கப்பட வேண்டிய திகதியை விஞ்சியிருந்த 127 மாதிரிகள் காணப்பட்டன. அவ்வாறு விநியோகிக்கப்பட்ட 257 அறிக்கைகளுக்கு இடையே 181 பரிசோதனை அறிக்கைகள் விநியோகிக்கப்பட வேண்டிய திகதியை விஞ்சியிருந்தமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | **ஆராய்ச்சி அறிக்கைகளை விநியோகிக்காமை மற்றும் தாமதம்.**<br>தரக்கட்டுப்பாடு மற்றும் தரப் பாதுகாப்பு பிரிவில் காணப்படுகின்ற ஊழியர் பற்றாக்குறையின் காரணமாக ஆராய்ச்சி அறிக்கைகளை விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தமை உண்மையாக இருந்த போதும், கணக்காய்வு அவதானிப்பின் பிரகாரம் பரிசோதனை அறிக்கை விநியோகித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>தற்போது ஆட்சேர்ப்பு நடைமுறைகளை திருத்தப்பட்டிருந்ததுடன், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. விரைவாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்று, ஊழியர்களை ஆட்சேர்த்து, தாமதமின்றி பரிசோதனை அறிக்கைகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான ஆட்சேர்ப்புக்களை விரைவாக மேற்கொண்டு உரிய பரிசோதனை அறிக்கைகளை குறித்த திகதியில் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த 03 ஆண்டுகளின் போது வெளிநாட்டு வியாபார கண்காட்சிகளுக்கான மொத்த செலவினமாக ரூபா 130,775,085 செலவினம் ஒன்று | வருடாந்த தேங்காய் உற்பத்தியில் நாளாந்த பயன்பாட்டிற்கான தேங்காய்களின் அளவு ஒதுக்கப்பட்டதன் பின்னர் எஞ்சுகின்ற அளவினை | தெங்கு சார்ந்த ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்கு தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த போதிலும், தெங்கு சார்ந்த 37 உற்பத்திகள் ஏற்றுமதி செயலாற்றல் பரிசோதனையின் போது 16 உற்பத்திகளின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்திருந்ததுடன், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டில் தெங்கு சார்ந்த உற்பத்திகளின் மொத்த ஏற்றுமதி வருமானம் 4 சதவீதமான சிறிய அளவினால் உயர்வடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | அடிப்படையாகக் கொண்டே தெங்கு சார்ந்த பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டின் போதும் 2018 ஆம் ஆண்டின் போதும் வருடாந்த தேங்காய் உற்பத்தியில் குறைவொன்று காண்பிக்கப்பட்டதுடன், தேங்காய் உற்பத்திகளின் விலைகள் உயர்வடைந்து சென்றமையின் காரணமாக தேங்காய் உற்பத்திகளின் ஏற்றுமதி அளவில் வீழ்ச்சியடைந்திருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது தேங்காய் உற்பத்தியில் அதிகரிப்பு காணப்பட்ட போதும் கடந்த ஆண்டுகளில் இறக்குமதியாளர்கள் ஏனைய போட்டி நாடுகளில் இருந்து தெங்கு சார்ந்த உற்பத்திகளை கொள்வனவு செய்திருந்தமையினால் விரைவாக இலங்கையின் தேங்காய் உற்பத்தி விற்பனைக்கு இடையூறாக தாக்கமளித்திருந்தது. | நடவடிக்கைகள் சரியாக இனங்காணப்பட்டதன் பின்னர் உரிய மேம்படுத்தல் செலவினங்கள் செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2019 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சந்தை மேம்பாட்டிற்காக தெங்கு சார்ந்த உற்பத்திகளை விற்பனை செய்வது தொடர்பான 02 செயலமர்வு மற்றும் அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு நிகழ்ச்சித் திட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட மூலதன நிதி ஏற்பாடு எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் கிடைக்காமையின் காரணமாக இந்த நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | இயலுமானவரை தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்கியிருக்க வேண்டும். |

**3.4 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேங்காய் உள்ளீடுகள் சார்ந்த உற்பத்திகளில் சீனி மட்டம், விட்டமின் மட்டம் மற்றும் கழிவுப் பொருள் மட்டம் (PHA) பரீட்சிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 6,625,660 தொகையில் UHPLL 3000 வகையின் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு முன்னர் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் | இந்த உபகரணம் 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் உபகரணங்களை பொருத்துவதற்கு குறித்த இடத்தில் நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும்வரை இந்த உபகரணங்களை சரியான பிரகாரம் பரீட்சிப்பதற்காக | வெற்றிடங்களை பூர்த்தி செய்து தாமதமின்றி இந்த இயந்திரத்தில் எதிர்பார்த்த பயன்பாட்டிற்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அதாவது இயந்தரங்களை பொருத்துவதற்கு பொருத்தமான இடம், அதற்குத் தேவையான பயிற்சி பெற்ற ஊழியம் என்பவற்றை வழங்கும் முறைமை போன்ற விடங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படாமையினால் இந்த இயந்திரம் 2020 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் 30 வரையும் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. எவ்வாறாயினும் இந்த உபகரணங்கள் தற்போது அமுல்படுத்தும் நிலையில் காணப்பட்ட போதிலும், பிரிவில் இருக்க வேண்டிய பகுப்பாய்வாளர்களில் 52 சதவீத வெற்றிடங்கள் காணப்படுகின்றமையனால் பகுப்பாய்வாளரின் நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற 300-400 அளவிலான பரிசோதனை பணிகள் தவிர ஏனைய இவ்வாறான புதிய பரிசோதனைகளுக்காக ஊழியர்களை ஈடுபடுத்துதல் பிரச்சினைக்குரியதாக இருந்தது. | |

## 3.5 மூலதன வேலைகளின் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேங்காய் ஏலமிடப்படுகின்ற நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக 2016 மே மாதம் பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்திருந்த போதும் ஒப்பந்த கிரயம் ரூபா 5,389,080 தொகையான உரிய நிர்மாணம் 2019 மார்ச் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019 யூலை 26 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், வேலைத்தள ஒப்பந்தகாரருக்கு உரிய பிரகாரம் கையளிக்காமை மற்றும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட திட்டம் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படாமை என்பவற்றினால் மேற்கூறப்பட்ட ஒப்பந்தம் 2020 யூன் மாதம் வரையிலும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | அதிகாரசபையின் பொறியியலாளர் (சிவில்) சேர்த்துக் கொள்ளப்படும் வரை இந்த பணிகள் தாமதமடைந்திருந்ததுடன், 2019 மார்ச் மாதம் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தேங்காய் ஏலமிடல் மண்டபத்தை நிர்மாணிக்கும் பணிகள் 2019 யூலை மாதம் 26 ஆம் திகதி ஒப்பந்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், பின்வரும் நியாயமான காரணங்களின் அடிப்படையில் திருத்த நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தது.<br><br>i. அதிகாரசபையின் தேவையினை விட பொருத்தமான பிரகாரம் கூறுபிரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். (Partition செய்தல்)<br><br>ii. மின்சார வழங்கல் முறைமையை மாற்றுவதற்கு ஏற்பட்டிருந்தமை. | பெறுகை பணிகளை ஆரம்பிப்பதற்கு முன் தேவைகளை பூர்த்திசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பெறுகை பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிர்மாணங்களை விரைவாக பூர்த்தி செய்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

iii. தீ ஏற்பட்ட கோட்டை ஆட்டுப்பட்டித்தெரு வீதியின் கட்டிடமொன்றிற்காக இழப்பீட்டு பணம் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் முடிவடையும் வரை அந்த மாடியில் காணப்பட்ட உடைந்த பகுதிகளை அகற்றுவதற்கு முடியாதிருந்தமை.

iv. ஏப்ரல் மாதம் நாட்டில் ஏற்பட்ட அவசர இடர் நிலைமையின் அடிப்படையில் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டமையின் காரணமாக கொழும்பு பொலிஸ் நிலையத்திலிருந்து வழங்கப்பட்ட ஆலோசனையின் படி இந்த நிலையத்தை நவீனப்படுத்தும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | | பரிந்துரை |
|---|---|---|---|
| | **பதவி** | **தற்போதைய நிலை** | |
| தென்னை அபிவிருத்தி அதிகார சபையில் காணப்படுகின்ற பிரதான பதவியான பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் (நிர்வாகம்) பணிப்பாளர் (தயாரித்தல் அபிவிருத்தி), பணிப்பாளர் (சந்தைப்படுத்தல் சர்வதேசம்), சட்ட உத்தியோகத்தர், ஆராய்ச்சி உத்தியோகத்தர், நிர்வாக உத்தியோகத்தர், புத்தக கட்டுனர் (இரண்டு பதவிகள்) என்ற பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் அதிகார சபையின் நோக்கங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றும் போது அதற்கு இடையூறாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் (நிர்வாகம் ) பதவி. | இந்த பதவிக்காக விண்ணப்பம் கோரப்பட்டு ஒரு வருடத்திற்கு அண்மித்த காலம் கடந்தமையினால் தீர்மானத்தை பெற்றுக் கொள்வதற்காக 2020.07.31 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | பணிப்பாளர் (தயாரித்தல் அபிவிருத்தி) | 2020.08.05 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலின் காரணமாக ஆட்சேர்ப்புக்கள் கைவிடப்பட்டிருந்தது. | |
| | பணிப்பாளர் (சந்தைப்படுத்தல் சர்வதேசம்) | இந்த பதவியின் வெற்றிடத்தை நிரப்புவது தொடர்பான தீர்மானமொன்றை பெற்றுக் கொள்வதற்காக 2020.07.31 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| | சட்ட உத்தியோகத்தர். | தகைமை பெற்ற விண்ணப்பதாரர் ஒருவர் இல்லாமையின் | |

| | |
|---|---|
| | காரணமாக ஆட்சேர்ப்பு நடைமுறைகளை திருத்துவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் விசாரிக்கப்பட்ட போதும் அந்த திணைக்களம் இணங்கியிருக்கவில்லை. அதனால், இந்த பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது 2019 நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் காரணமாக சகல ஆட்சேர்ப்புக்களும் கைவிடப்பட்டிருந்தது. |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அறிமுகப்படுத்தியிருந்த புதிய ஆட்சேர்ப்பு மாதிரியின் பிரகாரம் சகல ஆட்சேர்ப்பு நடைமுறைகளும் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு 2020.07.31 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| நிர்வாக உத்தியோகத்தர் | இந்த பதவிக்காக மேல் நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணையில் உள்ளமையினால் இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்படும் வரை ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள முடியாதிருந்தது. |
| புத்தக கட்டுனர் | இந்த பதவிக்காக நேர்முக பரீட்சையொன்று நடாத்தப்பட்டு ஒரு வருடத்திற்கு அண்மித்த காலம் ஏற்பட்டிருந்தமையினால் உரிய ஆட்சேர்ப்பிற்கான தீர்மானம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு 2020.07.31 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |